
# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

15.08.2020 சனிக்கிழமை

## 2021 மார்ச் மாதம்

# ஒன்பது மாகாணங்களிலும் ஒரே நாளில் தேர்தல்!

கொழும்பு, ஓக.15

நல்லாட்சி அரசாங்கத்தால் ஒத்திவைக்கப்பட்டுவந்த மாகாண சபைத் தேர்தலை 2021 மார்ச்சில் நடத்துவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

2

## புதினம் ? தெரியுமோ

இப்போதைக்கு பற்றியெரியும் விடயம் , மணிவண்ணன் விவகாரம் தான். மிக அற்பமான காரணங்களுக்காக மணியை, முன்னணி வெட்டி விட்டிருக்கிறது என்பதே முன்னணியின் பெரும்பாலான ஆதரவாளர்களின் கருத்தாக இருக்கின்றது. மணி வெளியேற்றப்பட்டதால் மிகப்பெரிய வாக்குச் சரிவு முன்னணிக்கு ஏற்படப்போகிறது. ஏனெனில் இதுவரை முன்னணி வெறும் நான்கு பேரை மையமாக வைத்தே தன்னுடைய அரசியல் பணிகளை முன்னெடுத்திருந்தது. அந்த நால்

2



## மருதமடு அன்னை ஆவணித் திருவிழா

*கொழும்பு, ஓக.15*

*மன்னார், மருதமடு அன்னையின் ஆவணி திருவிழா இன்று சனிக்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது. காலை 6.15 மணியளவில் கண்டி மறை மாவட்ட ஆயர் வியானி*

2

## இரு ஆண்டுகளில் புதிய அரசமைப்பு

### 19 ஊடாக ஓ.எம்.பிக்கு கடிவாளம்

*கொழும்பு, ஓக.15*

*புதிய அரசமைப்பை இயற்றும் பணியை ஈராண்டு காலப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு உத்தேசித்துள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. அரசமைப்பின் 20ஆவது திருத்தச்*

2

## வீடுகளுக்கு திரும்பிய 154 பேர்

*கொழும்பு, ஓக.15*

*டுபாயில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில், வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 154 பேர் இன்று வீடுகளுக்குத் திரும்ப*

2

## தேசியப் பட்டியல் விவரத்தை அறிவித்தது ஐக்கிய மக்கள் சக்தி

2

# முன்னணியின் முடிவுகள் மின்னஞ்சலில் மணிக்கு!

### கஜேந்திரகுமார் "கறார்"

*யாழ்ப்பாணம், ஓக.15*

*கட்சியின் மத்திய குழு கூடிச் சில முடிவுளை எடுத்திருந்தது. முக்கியமாக மணிவண்ணன் தொடர்பாகச் சில முடிவுகள் எடுக்கப்பட்டு, அந்த முடிவுகள் நேற்று இரவு மணிவண்ணனுக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்*

2

## இவைதான் சிக்கலாம்!

*யாழ்ப்பாணம், ஓக.15*

*தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் இருந்து சட்டத்தரணி வி.மணிவண்ணனை நீக்கும் முடிவை எடுத்த*

2



## தமிழ்த் தேசிய முன்னணியினர் முள்ளிவாய்க்காலில் உறுதியுரை

*முல்லைத்தீவு, ஓக.15*

*தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் இன்று*

2A

## நல்லூர் தேர்த் திருவிழாவுக்கு நேரில் வருவதை தவிருங்கள்!

யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் வேண்டுகோள்

2



# ஒன்பது....

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டிலுள்ள 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடைபெறும் எனவும், தேர்தலை நடத்துவதற்கு சட்ட ரீதியாக தடங்கலாக உள்ள காரணிகள் சட்ட திருத்தம் மூலம் சீர்செய்யப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.
மாகாண சபைத் தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்துவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்தாலும் நிதி பற்றாக்குறை காரணமாக, வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2021 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். பட்ஜட்மீது சுமார் ஒரு மாதகாலம் தொடர்ச்சியாக விவாதம் நடைபெறும். இதன்படி டிசெம்பரில் வரவு செலவுத் திட்டம் நிறைவேறும். அதன்பின்னர் ஜனவரி மாதம்வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும். எனவே பெப்ரவரி மாதத்தில்கூட தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படலாம் என ஆளுங்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின்போது மாகாணசபைகளுக்கான தேர்தல் கட்டங்கட்டமாகவே நடத்தப்பட்டது. ஆனால் இம்முறை ஒரே நாளில் நடத்தப்படும். (எ-44)

# மருதமடு அன்னை...

பெர்னாண்டோ தலைமையில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, காலி மறை மாவட்ட ஆயர் றேமன் விக்கிரமசிங்க, அநு ராதபுரம் மறை மாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.
இந்த நிலையில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் அன்னையின் ஆசீர்வாதத்தை வேண்டி மடுத்திருத்தலத்துக்கு வந்தனர்.
திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம் பெற்றதோடு மடு அன்னையின் ஆசி பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.
இந்தத் திருவிழா திருப்பலியில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், அரசியல் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு மடு அன்னையிடம் ஆசி பெற்றனர். (எ-56-60)

# புதினம் தெரியுமோ?

வரில் மூன்றாம் நிலையில் இருந்த மணிவண்ணன் வெளியேற்றப்பட்டால், அடுத்து வரும் தேர்தல்களில் முன்னணி பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலைக்குப் போக வேண்டியதுதான். இப்போது இன்னொரு விடயமும் கசிந்துள்ளது. இந்தமுறை பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள கூட்டமைப்பு அதைச் சரிக்கட்டும் வேலையில் இறங்கியுள்ளது. அந்தச் சமயத்தில் தான் முன்னணிக்குள் இப்படியொரு பிளவு ஏற்பட்டதால், அதனை வைத்துக் காய்கள் நகர்த்தப்படுகின்றன. மணிவண்ணன் மீது போடப்பட்ட வழக்கை வாபஸ் பெற்றால் அவர் மாநகரசபை உறுப்பினராகி விடலாம். மறுபுறத்தே மாநகர மேயரான ஆனல்ட், நாடாளுமன்றத் தேர்தலின் போது, கட்சியின் 'சீனா சூனா' கூட்டணியோடு முரண்பட்டதால் அவரை கழற்றிவிடும் வேலைகள் மும்முரமாக நடக்கின்றனவாம். தம்மோடு முரண்பட்ட ஆனோல்டிடம் இருந்து மேயர் பதவியைப் பிடுங்கி, அதனை மணிவண்ணனுக்கு கொடுத்தால் ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தலாம் என்பது அந்தக் கூட்டணியின் திட்டம். ஆனல்ட் மேயர் பதவியை இழந்து சாதாரண உறுப்பினராவார். மணிவண்ணனை கூட்டமைக்குள் இழுத்து வரலாம். மணிவண்ணனோடு அவருக்கு சார்பான முன்னணிக் காரர்களையும் கூட்டமைப்பில் இணைக்கலாம். கூட்டமைப்பின் வாக்கு வங்கியைக் கொஞ்சம் நிமிர்த்தலாம். முன்னணியைப் பலவீனப்படுத்தலாம் என்று ஏகப்பட்டவற்றைச் சாதிக்கமுடியும் என்று கூட்டிக் கழித்துப் பார்த்து வேலைகள் நடக்கிறதாம். இதற்கு மணிவண்ணன் தரப்பு சம்மதிக்குமா இல்லையா என்பதும் இன்னும் கொஞ்ச நாட்களில் தெரிந்துவிடும்.
-பட்சி

# இரு ஆண்டுகளில்...

சட்டமூலம் ஊடாக தற்போது நடைமுறையில் இருக்கும் 19 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர், புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கான 20ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் உத்தேச வரைவு எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாது செய்யப்பட மாட்டா எனவும் அவற்றில் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.
அத்துடன், காணாமல்ஆக்கப்பட்டோர் பணியகம் தொடர்பிலும் சில சட்ட திருத்தங்கள் இதன் 20 ஊடாக மேற்கொள்ளப்படும் எனவும் தெரியவருகின்றது. 19 ஆவது திருத்தச்சட்டம் வருவதற்கு முன்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 வருடங்களாக இருந்தது. அத்துடன், ஜனாதிபதியொருவர் இரண்டு தடவைகள் மாத்திரமே அப்பதவியை வகிக்கலாம் என்ற வரையறையும் 18 ஊடாக இல்லாமல் செய்யப்பட்டது.
எனவே, 19 நீக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் பதவிகாலம் 5 ஆகவே இருக்கும் எனவும், ஜனாதிபதி பதவியை நபரொருவர் இரண்டு தடவைகள் மட்டுமே வகிக்கலாம் எனவும் வலியுறுத்தும் சரத்துகளும் இணைக்கப்படவுள்ளன.
அதேவேளை, 19ஐ இல்லாதொழித்த பின்னர் ஜனாதிபதியால் அமைச்சுப் பதவிகளை வகிக்கமுடியும் என்பதுடன், இரட்டை குடியுரிமை கொண்டவர்களுக்கு தேர்தலில் போட்டியிடக்கூடிய சூழ்நிலையும் உருவாகும். (எ-44)

# தேசியப் பட்டியல்...

கொழும்பு, ஒக.15
ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் தொடர்பாக விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ரஞ்சித் மத்துமபண்டார, திஸ்ஸ அத்தநாயக்க, இம்தியாஸ் பாகிர் மாக்கர், எரான் விக்ரமசிங்க, ஹரின் பெர்னாண்டோ, மயந்த திஸாநாயக்க மற்றும் டயனா கமகே ஆகியோரே தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லவுள்ளனர்.
தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினராக பேராசிரியர் ஹரினி அமரசூரியகே தெரிவு செய்யப்பட்டுள்ளார். பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பாக சர்ச்சை நிலவியது. ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கத்துவம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் தமது கட்சிகளுக்கும் ஒவ்வொரு ஆசனங்கள் வழங்கப்படவேண்டும் என்று ஆரம்பத்தில் வலியுறுத்திருந்த போதிலும் பின்னர் இறுதி தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பை தலைமைத்துவத்திடமே ஒப்படைத்திருந்தன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைத் தவிர ஏனைய பிரதான கட்சிகளில் தேசிய பட்டியல் விவகாரம் இழுபறி நிலையில் காணப்பட்டது. தற்போது பிரதான கட்சிகள் அனைத்தும் அதற்குத் தீர்வு கண்டுள்ள போதிலும் எங்கள் மக்கள் சக்தி கட்சி மாத்திரம் இதுவரையில் விவரத்தை அறிவிக்கவில்லை.(எ)

# முன்னணியின் முடிவுகள்...

தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளை வகித்த சட்டத்தரணி வி.மணிவண்ணனை அந்தப் பதவிகளில் இருந்து நீக்கக் கட்சியின் மத்தியகுழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்ற தகவல் வெளியாகியிருந்தது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்த வி.மணிவண்ணன், கட்சியிடம் இருந்து தனக்கு அவ்வாறான உத்தியோகபூர்வ அறிவித்தல் வரவில்லை என்று தெரிவித்திருந்தார். இந்தநிலையில், கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், வி.மணிவண்ணனுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார். உத்தியோகபூர்வமான எழுத்துமூலப் பிரதி இன்று பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும். அது தொடர்பில் மணிவண்ணன் தனது நிலைப்பாட்டைத் தெரி விப்பார் என்று நினைக்கின்றேன். அதன்பின்னர் கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிப்போம் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (எ-20)

# வீடுகளுக்கு...

அனுமதிக்கப்பட்டனர்.
கொரோனா தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசால் முன்னெடுக்கப்பட்டிருந்தன .
அந்தவகையில் கடந்த முதலாம் திகதி டுபாயிலிருந்து அழைத்து வரப்பட்ட பயணிகள் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்து வரப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர்.
அவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த நிலையில், 154 பேர் அவர்களது சொந்த இடங்களான கம்பஹா, கொழும்பு, கண்டி, கேகாலை, திருகோணமலை, களுத்துறை போன்ற பகுதிகளுக்கு பஸ்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளனர்.
இந்தப் பயணிகளுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தமையுடன், கொரோனாத் தொற்று பீடிக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (எ-110)

# இவைதான்...

மைக்குச் சில காரணங்களை அந்தக் கட்சியின் மத்திய முன்வைத்துள்ளது. கடந்த முறை ஜனாதிபதி தேர்தலிலை புறக்கணிப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தமை, நாடாளுமன்றத் தேர்தலின் போது சிறு குழுக்களை அமைத்து செயற்பட்டமை மற்றும் புலம்பெயர் தேசத்தில் கட்சிக்கு எதிராக செயற்படுபவர் என்று கட்சியால் அடையாளப்படுத்தப்பட்ட நபருடன் தொடர்புகளை பேணியமை போன்ற காரணங்கள் அந்தக் கட்சியின் மத்திய குழுவால் முன்வைக்கப்பட்டுள்ளன.(எ-20)

# நல்லூர் தேர்த்...

யாழ்ப்பாணம், ஒக.15
நல்லூர் ஆலய தேர் உற்சவத்தில் பெருமளவு மக்கள் ஆலயத்தில் கூடுவதைத் தவிர்த்து, வீட்டில் இருந்து முருகக் கடவுளைத் தரிசியுங்கள் என்று தெரிவித்துள்ளார் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஸ் சேனாரத்ன. நாளைமறுதினம் நல்லூர் ஆலயத் தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. அதுதொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஆலயத் திருவிழாவுக்கு வரும் மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளின் பின்னரே வழிபாட்டுக்கு அனுமதிக்கப்படுகின்றனர். அண்மைய நாள்களில் ஆலயத்திற்கு வரும் அடியவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது. மக்கள் இது தொடர்பில் சற்றுத் தெளிவாக இருக்க வேண்டும். தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று சற்று தணிந்து காணப்படுகின்றது. ஆனால் சமூக தொற்று தொடர்பில் நாம் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும் நல்லூர் ஆலயத்தை பொறுத்தவரையில் நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமிருந்தும் பொதுமக்கள் தேர் உற்சவத்தில் கலந்து கொள்வது வழமை. நாட்டில் கொரோனா தொற்று அச்ச நிலைமை காணப்படுவதன் காரணமாக இந்தமுறை அவ்வாறு அனுமதிக்க முடியாது. ஆலய தேர் உற்சவத்திற்கு மக்கள் அதிகளவில் வருவதைத் தவிர்த்து சமூகத் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருங்கள். வீடுகளிலிருந்து முருகனைத் தரிசியுங்கள். அது உங்கள் எதிர்காலத்திற்கு நல்லதாக அமையும். என்றார். (எ-111)







# தமிழ்த் தேசிய முன்னணியினர்....

முள்ளிவாய்க்காலில் உறுதியுரை எடுத்துக் கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவிடத்தல் சுடரேற்றி, மலர்தூவி, உறுதிமொழிஎடுத்து சம்பிரதாயபூர்வமாக தமது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்தனர்.

இணைந்த வடக்கு, கிழக்கு, தமிழ்தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அங்கீகரத்துக்காகவும் தமிழ் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட மக்களின் சர்வதேச விசாரணைக்காகவும், போரால் அழிந்த எமது தேசத்தைக் கட்டி எழுப்பவும் அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் உழைப்போம் என்று அவர்கள் உறுதியுரை எடுத்துக் கொண்டனர்.

உள்ளக வெளியக சவால்களைச் சந்தித்த பின்னும் தமிழ்த்தேசியப் போராட்டம் நீட்சி பெற்றுள்ளது. கால நீட்சியில் படிமுறை ரீதியாக மாற்றங்களைக் கண்டபோதும் இலக்கு மாறாமல் புதிய பரிமாணத்தோடு எமது இலட்சியப் போராட்டம் தொடர்கின்றது. அதன் சாட்சியாக இங்கே அணி திரண்டு நாங்கள் நிற்கின்றோம்.

வரலாறு வழிகாட்ட, காலத்தின் கட்டளைக் கேற்ப வரலாற்றுப் பொறுப்பைச் சுமந்துள்ள நாம், தேச நிர்மாணிப்பாளர்களாக, நிலைமாற்றமடைய கடந்த கால தியாகங்களை மனதில் இருத்தி உறுதி கொள்கின்றோம்.

ஆத்மார்த்த ரீதியாக எம்மை எமது போராட்டத்தோடு இணைத்து, எமது விடுதலைக்கான போராட்டம் சந்தித்துள்ள தடைகளைக் கடந்து, இணைந்த வடக்கு, கிழக்குத் தாயகம், தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றின் அங்கீகாரத்துக்காகவும், தமிழ் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட எமது மக்களின் சர்வதேச நீதிக்காகவும், போரால் அழிந்த எமது தேசத்தைக் கட்டி எழுப்பவும் அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும் உழைப்போம் எனவும் உறுதிகூறுகின்றோம் என்றும் அவர்கள் உறுதியுரையில் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள், கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-246)

# தமிழரின் காணிகளைப் பறித்து புதிய சிங்களக் குடியேற்றங்கள்?

## வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் ரவிகரன் காட்டம்

முல்லைத்தீவு, ஓக.16

முல்லைத்தீவு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மற்றும் கருநாட்டுக்கேணி ஆகிய பகுதியிலிருந்து எமது தமிழ் மக்கள் அனைவரையும் அகற்றி விட்டு, அப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதுதான் அரசினுடைய திட்டமா என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொக்கிளாய்பகுதியில், கனியவளத் திணைக்களம், கடற்படையினர் மற்றும், தென்னிலங்கையிலிருந்து தொழிலுக்காக வந்த சிங்கள மக்கள் எனப் பல தரப்பினராலும், அபகரிக்கப்பட்டுள்ள தமது பூர்வீக விவசாய மற்றும் குடியிருப்புக் காணிகளை விடுவிக்குமாறு கோரி கொக்கிளாய்ப் பகுதி தமிழ் மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொக்கிளாய்ப் பகுதி மக்கள் நெற் பயிர்ச் செய்கைகள், தோட்டப் பயிர்ச் செய்கை மூலமே தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 1984ஆம் ஆண்டு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வலுக் கட்டாயமாக இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டனர். அதன் பிற்பாடு கொக்கிளாய் முகத்துவாரம் உட்பட, தமிழ் மககளுடைய பல காணிகள் அபகரிக்கப்பட்டு, அக்காணிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். குறிப்பாக கொக்கிளாய் முகத்துவாரம் பகுதிக் காணிகள் அனைத்தும் தமிழ் மக்களுடைய காணிகளாகும்.

இந்த நிலையில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் தற்போது முகத்துவாரம் பகுதியில் குடியிருக்கின்றன என புள்ளிவிவரங்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இது தவிர கொக்கிளாயில், கனியவளத் திணைக்களத்துக்கென தமிழ் மக்களுக்குச் சொந்தமான, ஏறக்குறை 44ஏக்கர் காணி அபகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இக் காணிகளை சில அரச அதிகாரிகள் அளவீடு செய்து தருவதாகவும், அதற்காக காணிக்குரியவர்கள் கையெழுத்திட வேண்டும் என்றும், காணிக்குரிய சில மக்களிடமிருந்து கையெழுத்துக்களும் பெறப்பட்டன. தற்போது அதனைப் பயன்படுத்திக் கொண்டு மக்களுக்குச் சொந்தமான குறித்த காணிகளை அபகரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். இங்குள்ள மக்களுக்கு வேறு பகுதிகளில் காணிகள் இல்லை. இந்நிலையில் வேறு இடங்களிலிருந்து இங்கு கொண்டுவந்து குடியேற்றுவதற்காகவும், கனிய வளத் திணைக்களத்துக்கெனவும் இக்காணிகளை அபகரித்தால், காணிகளுக்குரிய எமது மக்கள் எங்கே செல்வார்கள்.

இந்த மக்கள் மிகவும் வறுமைப்பட்டவர்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தைச் சிதைக்கவேண்டாம். அவர்களை வாழவிடுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கின்றோம் -என்றார். (ப-246)

# எதிரணி கொறடாவுக்கு சஜித் அணியில் போட்டி

கொழும்பு, ஓக.15

நாடாளுமன்றில் எதிரணி பிரதம கொறடா பதவிக்காக சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பதவியை இலக்கு வைத்து ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் சம்பிக்க ரணவக்க, லக்ஷ்மன் கிரியெல்ல, ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசீம் ஆகியோர் காய்நகர்தல்களை மேற்கொண்டு வருகின்றனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எனினும், சம்பிக்க ரணவக்க, லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய இருவரில் ஒருவருக்கே இந்தப் பதவி வழங்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரங்கள் தெரிவித்தன. 9ஆவது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாச செயற்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஆளுங்கட்சியின் சார்பில் சபை முதல்வராக தினேஷ் குணவர்தனவும், ஆளுங்கட்சி பிரதம கொறடாவாக ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவும் நியமிக்கப்படவுள்ளனர். (எ)

### கடந்த இரண்டு வாரங்களில்

# போதைப்பொருள் வர்த்தகத்தால் ரூபா 220 கோடி பரிமாற்றம்

கொழும்பு, ஒக.15

கடந்த இரண்டு வார காலப் பகுதியில் சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகம் மூலம் 220 கோடி ரூபா பரி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளார் ஜாலிய சேனாரத்ன தெரிவித் துள்ளார். பொலிஸ் தலைமை யகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் வர்த்தகம் ஊடாக பெற்றுக் கொள்ளப் பட்ட பணம் பறிமாறும் முறை மற்றும் அவற்றைப் பயன்ப டுத்தி வெளிநாடுகளில் முதலீடு கள் மேற்கொள்ளப்படுகின் றனவா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. பறிமுதல் செய் யப்பட்ட பணத்தை நிதிச் சலவை திட்டத்தின் கீழ் அரசு டமையாக்குவதற்கு நடவ டிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதனைத் தவிர சட்டவிரோத போதைப்பொருள் களஞ்சிய அறைகள் 8 சுற்றிவளைக் கப்பட்டன.

அங்கு பெற்றுக்கொள்ளப் பட்ட பொருள்கள் அனைத் தும் அரசுடைமையாக்கப்பட வுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)



## எருவுக்குள் மறைத்து கொண்டு வரப்பட்ட முதிரைக் குற்றிகள் மீட்பு

கொடிகாமம், ஒக. 15

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத் தப்பட்ட முதிரைக் குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாட்டெரு ஏற்றிய லொறி ஒன்றினுள் மறைத்துக் கொண்டுவரப்பட்ட 10 இலட்சம் ரூபா பெறும தியான, 43 முதிரைக் குற்றிகள் சரசாலைப் பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றை ஏற்றி வந்தவர் கள் தப்பியோடிய நிலையில் லொறியும், முதிரை மரக்குற்றிகளும் சாவகச்சேரி பொலிஸ் நிலை யத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என சாவ கச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ரி3-159)



யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஆர்.பி.ஜி குண்டு ஒன்று பழுதடைந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளது. இந்தக் குண்டு யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்டு புதைக் கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப் படுகிறது. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ரி3-159)



கொடிகாமம் எருவன் பகுதியில் இருந்து மிதிவெடி ஒன்று கடந்த வெள்ளிக் கிழமை கொடிகாமம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. வீதி திருத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மிதி வெடி ஒன்று காணப்படுகிறது என கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மீட்கப்பட்ட மிதி வெடியை, செயலிழப்பு செய்வதற்கான நடவடிக்கையை கொடிகாமம் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி3-159)

## வில்பத்து காடழிப்பு விவகாரம்; விசாரணை அறிக்கை விரைவில்

கொழும்பு, ஒக.15


வில்பத்து காடழிப்பு விவகாரம் தொடர்பான விசாரணை அறிக்கை வெகுவிரைவில் பகிரங்கப்படுத் தப்படும். குற்றவாளிகளுக்கும் தண்டனை வழங்கப்ப டும் என வனஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வன வளத்துறை அமைச்சர் சி. பி. ரத்நாயக்க தெரிவித்தார். வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்துரைக்கையில் அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்;

வில்பத்து காடழிப்பு விவகாரம் இயற்கை வளத்துக்கு பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படு கின்றன. ஆகவே விசாரணை தொடர்பான அறிக்கை களை வெகுவிரைவில் பகிரங்கப்படுத்துவேன். காட ழிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் - என்றார். (ரி1)

## கிளி. வைத்தியசாலையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

கிளிநொச்சி, ஒகஸ்ட் 15

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சுத்த மான குடிதண்ணீர் இல்லாமையால் தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றோம் என நோயாளா் கள் கவலை வெளியிட்டுள்ளனர். மேலும், வைத்தியசாலையில் சுத்தமான குடிதண்ணீர் என பதாகைகள் மாத்திரமே உள்ளன. அதில் தண்ணீர் வருவதில்லை. குளிப்பதற்கு அதிக தண்ணீர் பயன்படுத்தவும் தடைவிதிக்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நோயாளர் நலன்கருதி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் அத்துடன், கொரோனா தொடர்பான சுகாதார நடவடிக்கைகளும் நடைமுறையில் இல்லை. சம்பந்தப்பட்ட அதிகா ரிகள் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (ரி3-113)



## திருமலையில் பி.சி.ஆர். மாதிரிகள் சேகரிப்பு

திருகோணமலை, ஒக.15

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தி னால், நேற்று சமூகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 நபர்களின் பி.சி.ஆர். மாதிரிகள் எடுக்கப்பட்டன.

கொவிட் 19 தடுப்பு முற்பாதுகாப்பு நடவடிக்கைக் காக இவ்வாறான மாதிரிகள் பெறப்பட்டு பரிசோத னைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வைத்திய அதிகாரி, சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## வெளிநாட்டமைச்சின் புதிய செயலாளர் கடமைகளை ஏற்றார்

கொழும்பு, ஒக.15

வெளிநாட்டமைச்சின் செயலாளராக நியமிக் கப்பட்ட அட்மிரல் பேராசிரியர். கலாநிதி ஜயநாத் கொலம்பகே நேற்றுத் தனது கடமை களை பொறுப்பேற்றார். அட்மிரல் கொலம் பகே, முன்னதாக, 2019 டிசம்பர் இலிருந்து ஜனாதிபதியின் வெளிநாட்டு உறவுகளுக் கான மேலதிக செயலாளராகவிருந்தார். அத்துடன் அவர், தற்போது இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் பணிப் பாளர் நாயகமாகவும் சேவையாற்றுகின்றார். இலங்கைக் கடற்படையில் 36 வருடங்களாக சேவையாற்றி, 2014 ஜூலை 1 இல் கடற் படை தளபதியாக ஓய்வுபெற்றார். (ரி1)



# நல்லூர் ஆலய தேர் உற்சவத்துக்கு அதிகளவில் ஒன்றுகூடுவதைத் தவிர்க்குக

## பக்தர்களிடம் யாழ் அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக.15

தற்போதைய கொரோனா சூழ்நிலையை கருத்தில் கொண்டு நல்லூர் ஆலய தேர் உற்சவத்திற்கு அடியவர்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதைத் தவிர்க்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை நல்லூர் ஆலய தேர் உற்சவம் இடம்பெறவுள்ள நிலையில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா மிக விமரிசையாக நடைபெற்று வருகின்றது. தேரோட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. தீர்த்தோற்சவம் மறுநாள் 18ஆம் திகதி இடம்பெறவிருக்கின்றது. தற்பொழுது பக்தர்கள் அதிகளவில் நல்லூர் கந்தனை தரிசிப்பதற்கு வருகை தருவதனை அவதானிக்கக்



கூடியதாக உள்ளது. ஏற்கனவே சுகாதாரப் பகுதியினர், பொலிஸார், பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் சுகாதார அறிவுறுத்தல்களை பக்தர்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே சுகாதார நடைமுறைகளைப் பேணி சமூக இடைவெளியைப் பின்பற்றி பக்தர்கள் சகல உற்சவங்களிலும் கலந்து கொள்வதற்கு ஏற்றவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வருட நல்லூர் கந்தன் திருவிழாவில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உற்சவங்களில் கலந்துகொள்ளுமாறு ஏற்கனவே பக்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை ஆலயத் தேர் உற்சவத்தை உலகளாவிய ரீதியில் தொலைக்காட்சி வழியாக வீடுகளில் இருந்தவாறே பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே, இயலுமானவரை நீங்கள் வீடுகளிலிருந்து ஆலயத் தேர் உற்சவத்தைக் கண்டுகளிக்க முடியும்.

பக்தர்கள் அனைவரும் இந்த விடயத்தை கருத்தில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் யாழ் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றை மிகவும் கட்டுப்படுத்தி உங்களைப் பாதுகாத்துள்ளோம். இந்த சூழ்நிலையிலே சமூகத்தில் ஒவ்வொரு தனி மனிதனின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக செயற்பட வேண்டியது ஒவ்வொரு வருடைய கடமையாகும். எனவே இந்த தேர்த்திருவிழா உற்சவத்தில் பக்தர்கள் அதிகளவில் ஒன்று கூடுவதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (ரி3)

# பிரிவுபசார நிகழ்வு



கல்விப் பணிப்பாளர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கான பிரிவுபசார நிகழ்வு நேற்றுமுன்தினம் வலயக் கல்விப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பார்த்தீபன் அபிராமி, பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணி, மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீராமச்சந்திரன், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.யோகநாதன் மற்றும் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் திணைக்கள அதிகாரிகள், கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ரி3-108)

# 24 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஒக.15

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை ஈச்சமோட்டை பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தர்மபுரம் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 24 லீற்றர் கசிப்பு, 48 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன கைற்பற்றப்பட்டமையுடன் சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். (ரி3-113)

# போலி ஆவண தயாரிப்பு நிலையம் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஒக.15

நாரஹேன்பிட்டியில் அரச உத்தியோகத்தர்களின் முத்திரைகள் மற்றும் ஆவணங்களைப் போலியாகத் தயாரித்த நிலையமொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. நாரஹேன்பிட்டியில் உள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு அருகில் குறித்த நிலையம் அமைந்துள்ளதுடன், அதனை நடத்திச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு தெற்கு பிராந்திய ஊழல் தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையத்திலிருந்து பொலிஸ் தலைமையதிகாரிகள், சமாதான நீதவான்கள், மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் சுமார் 88 போலி முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாகன சாரதி அனுமதிப்பத்திரம், அடையாள அட்டைகள், முறைப்பாட்டுப் பத்திரங்களின் பிரதிகள், பிறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட 19 போலி ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டனர். (ரி1)



கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருள்கள் தொழில் மேம்பாட்டு அமைச்சர் இந்திக அநுருத்த கடமைகளைப் பொறுப்பேற்றார்.

## ராஜாங்கனையில் 50 மாணவருடன் 96 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக.15

பொலனறுவை ராஜாங்கனையில் 50 மாணவர்கள், 6 ஆசிரியர்கள் உட்பட்ட 96 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 16 வயது மாணவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டமையை அடுத்தே இந்த 96 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ராஜாங்கனைப் பிரதேசத்தில் 102 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போதே அந்த மாணவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பபட்டது. (ரி1)

# விசாவுக்கு விண்ணப்பிக்க சீனருக்கு இணையப்பக்கம்

கொழும்பு, ஒக.15

சீன நாட்டவர்கள் இலங்கை விசாவுக்கு விண்ணப்பிப்பதற்காக இலங்கையின் குடிவரவுத் திணைக்களம் சீனாவுக்கான இணையப்பக்கம் ஒன்றை உருவாக்கியுள்ளமையை சீனா வரவேற்றுள்ளது. இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் இது தொடர்பில் தமது வரவேற்பை வெளியிட்டுள்ளது. இரண்டு நாடுகளின் நம்பிக்கையும் வசதியளிப்புமே சுற்றுலாப்பயணிகளை வரவழைப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றன என்று சீனத் தூதரக பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த சில வருடங்களாக தேவையற்ற இணையப் பிரச்சினைகள் விசா விடயத்தில் இருந்து வந்தன. இந்தநிலையில் ஏற்கனவே தாய்லாந்து, நியூஸிலாந்து போன்ற நாடுகள் தமது நாட்டுக்கு வரும் சீனாவின் சுற்றுலாப்பயணிகளுக்காக நட்பு ரீதியான கொள்கைகளை நடைமுறைப்படுத்தியுள்ளன என சீனாவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ரி1)

# இலங்கையோடு இணைந்து செயற்பட பாகிஸ்தான் தயார்

## அந்நாட்டின் பதில் தூதுவர் உறுதியுரை

கொழும்பு, ஓக.15

இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகிய விடயங்களில் முழுமையான ஆதரவை வழங்குவதோடு, தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக பாகிஸ்தானிய பதில் தூதுவர் தன்வீர் அஹமத் உறுதியளித்துள்ளார்.

பாகிஸ்தானின் 74 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பரஸ்பர மரியாதை, புரிந்துணர்வு மற்றும் நெருங்கிய ஒத்துழைப்பு என்பவற்றின் அடிப்படையில் இலங்கையுடன் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் உறவுக்கு பாகிஸ்தான் மிகுந்த மதிப்பளிக்கின்றது.

பாகிஸ்தான் தொடர்ந்தும் இலங்கைக்கு அதன் ஆதரவை வழங்கி வருகின்றது. குறிப்பாக இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகிய விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றது - என்றார். (ரி2)

# வெடிபொருள்களுடன் ஒருவர் கைது

இரத்தினபுரி, ஓக.15

இரத்தினபுரி வெரனியகொட கரங்கொடைப் பகுதியில் கைக்குண்டு ஒன்றுடனும், துப்பாக்கி ஒன்றுடனும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 23 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து போரா 12 ரக துப்பாக்கியும், இரண்டு கைக்குண்டுகளும், பயன்படுத்தப்படாத 4 தோட்டாக்களும், பயன்படுத்த முடியாத 13 தோட்டக்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ரி2)

# ரயிலுடன் மோதி ஒருவர் சாவு

கொழும்பு, ஓக.15

வெள்ளவத்தையில் இன்று அதிகாலை ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். காலியிலிருந்து மருதானை நோக்கி பயணித்த ரயில் இந்த நபர் மீது மோதியுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. விபத்தில் வெள்ளவத்தையைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி1)

# அங்கொட லொக்கா உயிரிழந்தாரா? சில நாள்களில் தெரியவரும்

## ஜாலிய சேனாரட்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15

அங்கொட லொக்கா உண்மையிலேயே உயிரிழந்து விட்டாரா என்பது குறித்து இன்னும் சில நாட்களில் தெரியவரும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ஜாலிய சேனாரட்ன ஊடகங்களிடம் நேற்று இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, அங்கொட லொக்கா தொடர்பில் இந்தியாவில் விசாரணை கள் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கொட லொக்காவின் கைரேகைகள் மற்றும் அவரது பெற்றோரின் இரத்த மாதிரிகள் சமீபத்தில் இந்திய பாதுகாப்பு படையினருக்கு அனுப்பப்பட்டன. இந்நிலையில், அங்கொட லொக்காவின் மரணம் பற்றிய உண்மை விரைவில் வெளியாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த அங்கொட லொக்கா, இந்தியாவில் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது உடல் மதுரையில் எரிக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் தற்போது இந்திய மத்திய குற்றப்புல னாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி1)

# பெண் துஷ்பிரயோகம்; இலங்கையர் ஒருவரை நாடு கடத்த உத்தரவு

வெலிங்டன், ஓக.15

நியூஸிலாந்தில் பெண் ஒருவரை துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்ட இலங்கையர் ஒருவரை நாடு கடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணன் என்று அழைக்கப்படும் அருமதுர மனோஜ் கிருஷான் தயாசந்திர டி சில்வா என்பவரே நாடு கடத்தப்படவுள்ளார். பெண் ஒருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டுக்காக அவர் இரண்டு வருடங்கள் எட்டு மாதங்கள் என்ற காலவரையறை சிறைத்தண்டனைக்கு நேற்று முதல் உட்படுத்தப்பட்டுள்ளார்.

30 வயதுடைய இவர் ஏற்கனவே பண மோசடி வழக்கு ஒன்றின் கீழ் சிறைத் தண்டனையில் இருந்து வருகிறார். இந்தநிலையில் 2014ஆம் ஆண்டு நண்பர்களுடன் மதுபான விருந்தில் பங்கேற்ற பின்னர் பெண் ஒருவரை துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்திய மையுடன் அவரை தாக்கினார் எனவும் நீதி மன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டது. இதனையடுத்தே இலங்கையருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன்சிறைவாசம்இருந்து வரும் காலத்தில் அவருக்கு விடுமுறை வாய்ப்பு (பரோல் தகுதி) வழங்கப்படும்போது அவரை இலங்கைக்கு நாடு கடத்துமாறு கிறிஸ்ட்சேர்ச் நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டது. (ரி1)

1 கோடி 20 லட்சம் பெறுமதியான

# வல்லப்பட்டையும் சந்தனமும் சுங்கத் திணைக்களத்தால் மீட்பு

சட்டவிரோதமாக கடத்த முயற்சி செய்யப்பட்ட 120 கிலோகிராம் வல்லப்பட்டை மற்றும் 120 கிலோகிராம் சந்தனத்தை இலங்கை சுங்கத் திணைக்களம் கைப்பற்றியுள்ளது. 40 அடி குளிரூட்டப்பட்ட கொள்கலனில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவை மீட்கப்பட்டுள்ளன. அழுகிய நிலையில் காணப்பட்ட மரவள்ளிக்கிழங்குகள், பப்பாளி, இளநீர், அன்னாசிப்பழம் உள்ளிட்ட பொருள்களுடன் வைத்து இந்தக் கடத்தல் முயற்சி இடம்பெற்றுள்ளது என சுங்கத் திணைக்கள பணிப்பா ளர் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார். ஒருகொடவத்தை ஏற்றுமதி வசதி மையத்தில் இணைக்கப்பட்டுள்ள தாவர வகைகளின் தனிமைப்படுத்தல் சேவை அதிகாரிகளின் உதவியுடன் இக்கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட் டுள்ளது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த ஏற்றுமதியாளர் ஒருவரால் டுபாய்க்கு ஏற்றுமதி செய்வதற்காக, இவை தயார் செய்யப்பட்டிருந்ததெனவும், இப்பொருள்களின் மதிப்பு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாகும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. சந்தேகநபர் உள்ளிட்ட மூவர் சுங்கத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதுடன் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

# மேலும் 309 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஓக.15

கொரோனா அச்சுறுத்தலால் வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 309 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அந்தவகையில் லெபனான் பெய்ரூட் நகரிலிருந்து 245 இலங்கையர்களும், அபுதாபியிலிருந்து 40 இலங்கையர்களும், டோஹாவிலிருந்து 11 இலங்கையர்களும், இந்தியாவின் மும்பை நகரிலிருந்து 13 இலங்கையர்களுமே நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பி.சி. ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி2)

# வெடிக்காத நிலையில் வெடிபொருள் மீட்பு

கிளிநொச்சி, ஓக 15

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காட்டுப் பகுதியில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் வெடிக்காத வெடிபொருள்கள் காணப்படுகின்றன என பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் ஆர்.பி.ஜி . குண்டு மற்றும், இரண்டு மோட்டார் குண்டுகள் என்பவற்றை அடையாளப்படுத்தியுள்ளனர்.

இவற்றை செயலிழலப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதிமன்ற அனுமதிகள் பெறப்படவுள்ளமையுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3-6)



# சிறைச்சாலை அதிகாரிகள் 21 பேருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஒக.15

சிறைச்சாலை அதிகாரிகள் 21 பேருக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலை நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட சிறைச்சாலை அதிகாரிகள் 15 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 15 பேரில் உதவி சிறைச்சாலை அத்தியட்சகர் ஒருவரும், பிரதான சிறைச்சாலை அதிகாரிகள் இரண்டு பேரும் மற்றுமொரு சிறைச்சாலை அதிகாரியும் உள்ளடங்குகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரி2)

## ஹெரோய்ன் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஒக.15



கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட விவேகானந்தர் பகுதியில், ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

22 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டவர் எனவும், அவரிடமிருந்து 1 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நீதி அமைச்சரின் கீழ் 17 அலுவலகங்கள்

கொழும்பு, ஒக.15

நீதி அமைச்சர் மொஹமட் அலி சப்ரியின் மேற்பார்வையின் கீழ் 17 அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன. அந்தவகையில் நீதி அமைச்சரின் மேற்பார்வையின் கீழ் இயங்குபவையாக சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம், கடன் இணக்க சபைத் திணைக்களம், அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம், உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகம், இலங்கை சட்ட ஆணைக் குழு, உயர் நீதிமன்ற வளாக முகாமைத்துவ பணிப்பாளர் சபை, சட்ட உதவி ஆணைக் குழு, மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழு, சட்டக் கல்வி பேரவை, பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம், இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம், இலங்கை சர்வதேச மத்தியஸ்த நிலைய நிறுவனம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை ஆகிய அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.(ரி2)

# மணல்கடத்தலில் ஈடுபட்ட இருவர் நேற்றுக் கைது

கிளிநொச்சி, ஒக.15

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை மடுக்கரை பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மணல் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம் ஒன்றும் உழவு இயந்திரம் ஒன்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டாவளை பிரதேசசெயலரால் தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-113)



# மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஒக.15

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் பல தடவைகள் சிறிதளவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாடு முழுவதும், குறிப்பாக வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும், மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் எதிர்வுகூறியுள்ளது.(ரி2)












மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி திருவிழா இன்று சனிக்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றபோது.....





இந்தியாவின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இன்று நடைபெற்றன. யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகக் கொன்சியூலர் ச.பாலசந்தர் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றினார். அதன்பின்னர் இந்தியக் குடியரசுத் தலைவர் கோவிந்நாத் சிங்கின் சுதந்திர தின உரை வாசிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நிகழ்வுகளும், மரநடுகையும் நடைபெற்றன. (எ-20)

# கொரோனா: மீண்டோர் 1 கோடியே 39 லட்சம் பேர்




உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 1 கோடியே 39 லட்சத்தை கடந்துள்ளது. நேற்றைய நிலைவரப்படி, 2 கோடியே 10 லட்சத்து 92 ஆயிரத்து 417 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 63 லட்சத்து 90 ஆயிரத்து 150 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 64 ஆயிரத்து 509 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. கொரோனாத் தொற்றுக்கு நேற்று வரை 7 லட்சத்து 57 ஆயிரத்து 738 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 1 கோடியே 39 லட்சத்து 44ஆயிரத்து 529 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ளனர். கொரோனாவால் அதிகமானோர் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலாவது இடத்திலும், பிரேசில் இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன. (ரி1)



# முண்டியடிக்கும் அமெரிக்கா

வொஷிங்டன், ஓக.15 மொடர்னா நிறுவனம் தயாரிக்கும் கொவிட் 19 தடுப்பு மருந்தை வாங்குவதற்கு அமெரிக்கா 1.5 பில்லியன் டொலர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டுள்ளது. தடுப்பு மருந்துகளின் செயற்றிறன் நிரூபிக்கப்பட்டு, அவை அங்கீகாரம் பெற்ற பின்னர் 100 மில்லியன் தடுப்பூசிகளை மொடர்னா நிறுவனம் அமெரிக்காவுக்கு வழங்கும். ஒப்பந்தத்தின்படி, அமெரிக்கா மேலும் 400 மில்லியன் தடுப்பூசிகளை வாங்க முடியும். இறுதிக் கட்டச் சோதனையில் உள்ள அந்தத் தடுப்பு மருந்தை அடுத்த மாதத்திற்குள் தயார் செய்வது மொடர்னா நிறுவனத்தின் திட்டம். ஆய்வுக் கூடங்களில் தயாரிக்கப்படும் கொவிட் 19 தடுப்பூசிகளைப் பெறுவதற்காக சுமார் 11 பில்லியன் டொலர் மதிப்புள்ள முன்பதிவு ஒப்பந்தங்களை அமெரிக்கா செய்துள்ளது. மொடர்னா மேம்படுத்தி வரும் தடுப்பு மருந்து தற்போது இறுதிக் கட்ட சோதனை மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு மருந்துகளில் ஒன்றாக உள்ளது. 30,000 பேர் மீது இந்த மருந்து சோதனை செய்யப்பட்டு வருவதோடு அது வரும் செப்டெம்பர் மாதம் பூர்த்தியாகும் என்று அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ரி1)

## லத்தீன் அமெரிக்க பிராந்தியத்தின்
# பெரு இராச்சியத்தில் அதிக உயிரிழப்புக்கள்

லத்தீன் அமெரிக்க பிராந்தியத்தில் அதிகூடிய கொரோனா உயிரிழப்புக்கள் சம்பவித்துள்ள நாடாக பெரு இராச்சியம் மாறியுள்ளது. கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்தை தாண்டியதை அடுத்து அந்நாட்டை மீண்டும் முடக்கிவிட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். பெரு இராச்சியத்தில் 5 மாநிலங்களில் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமையையடுத்து பொதுமக்கள் ஒன்று கூடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அந்நாட்டிலுள்ள 50 மாநிலங்களில் 25 மாநிலங்களை முடக்கி விடுவதற்கான சட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேசில் மற்றும் சிலி இராச்சியத்திற்கு அடுத்து லத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தில் அதிகூடிய கொரோனாத் தொற்றாளர்கள் பெரு இராச்சியத்திலிருந்து பதிவாகியுள்ளனர். (ரி1)






## எஸ்.பி.பியின் மனைவிக்கும்
# கொரோனாத் தொற்று

பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் மனைவிக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கொரோனா தொற்றால் பிரபல பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் தனியார் மருத்துவ மனையொன்றில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்ற நிலையில், அவரது மனைவி சாவித்திரிக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, தற்போது அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ள எஸ்.பி. பாலசுப்ரமணியத்திற்கு செயற்கை சுவாசத்தின் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. எஸ்.பி. பாலசுப்ரமணியம் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில், கடந்த 5 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந் நிலையில் அவரது உடல்நிலை நேற்றிரவு மோசமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## ஈரான் நாட்டின்
# எரிபொருள் கப்பல்கள் அமெரிக்காவால் பறிமுதல்



பொருளாதாரத் தடைகளை மீறி ஈரான், எரிபொருளை ஏற்றியது எனக் கூறப்படும் கப்பல்களின் சரக்குகளை ட்ரம்ப் நிர்வாகம் முதன்முறையாக பறிமுதல் செய்துள்ளது. ஈரானிய எரிபொருளை வெனிசுலாவுக்கு கொண்டு செல்வதை இலக்காகக் கொண்ட பெரிங், பெல்லா, லூனா மற்றும் பாண்டி என பெயரிடப்பட்ட கப்பல்களின் சரக்குகளையே ட்ரம்ப் நிர்வாகம் இவ்வாறு கைப்பற்றியுள்ளது. வெள்ளை மாளிகைக்கும் தெஹ்ரானுக்கும் இடையில் பதற்றம் அண்மைய நாள்களில் அதிகரித்துள்ள நிலையில், இந்த நான்கு கப்பல்களையும் அமெரிக்கா கைப்பற்றியுள்ளது என வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் செய்தி வெளியிட்டுள்ளது. (ரி1)

சுடர் ஒளி
மாலைப்பதிப்பு

# இம்முறை ஐ.பி.எல்லை தவறவிடும் வீரர்கள்

லண்டன், ஒக.15

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா இடையில் சர்வதேச வைற்போல் கிரிக்கெட் தொடர் நடைபெற இருப்பதால், ஐ.பி.எல் முதல் வாரத்தில் முக்கிய வீரர்கள் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.பி.எல் ரி20 கிரிக்கெட் தொடர் செப் ரெம்பர் 19 ஆம் திகதி முதல் நவம் பர் 10 ஆம் திகதி வரை நடைபெற வுள்ளது. உலக கிண்ணக் கிரிக்கெட் தொடர் ரத்து செய்யப்பட்டதால் அந்த நேரத்தில் ஐ.பி.எல் போட்டி நடத்தப்படுவதால் அனைத்து வீரர்களும் முதலில் இருந்து கடைசி வரை இடம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் இங்கிலாந்து- ஆஸ்திரேலியா இடையில் தலா மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட் தொடர் செப்ரெம்பர் 4 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறும் வகையில் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதனால் இரண்டு நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர்கள் முதல் வார ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்த வுள்ளது. (ரி2)



# டென்னிஸிலிருந்து பியான்கா விலகல்

வொஷிங்டன், ஒக.15

நடப்பு ஆண்டுக்கான அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர், எதிர்வரும் ஒகஸ்ட் 31 ஆம் திகதி முதல் செப். ரெம்பர் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், ஆண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்துப் பெற்ற நடப்பு சம்பியனான பியான்கா ஆன்ட்ரெஸ்கு, அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் அமெரிக்காவில் அதிகமாக இருப்பதாலேயே, அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். முன்னதாக கொவிட்19 அச்சுறுத்தல் காரணமாக, முதல் நிலை வீராங்கனையான ஆஷ்லி பார்ட்டி, ஜாம்பவான் ரபேல் நடால் ஆகியோர் விலகி யிருந்தனர். தற்போது இந்த பட்டியலில் பியான்கா ஆன்ட்ரெஸ்குவும் இணைந்துள்ளார்.

கடந்த ஆண்டு அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொட ரின் மகுடத்துக்கான இறுதிப் போட்டியில், பிரபலமான செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி 19 வயதான கனேடிய வீராங்கனை பியான்கா ஆன்ட்ரெஸ்கு சம்பியன் பட்டம் வென்றிருந்தார். இவர் 2000 ஆம் ஆண்டுகளில் பிறந்து கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் வீராங்கனை என்கின்ற பெருமையையும் பெற்றுள்ளார். (ரி2)

# அரையிறுதியில் பரிஸ் செயிண்ட்

லண்டன், ஒக.15

யு.இ.எப்.ஏ. சம்பியன் லீக் கால்பந்துத் தொட ரின் முதல் காலிறுதி ஆட்டத்தில் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி (பி.எஸ்.ஜி) வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இந்த ஆட்டம் எஸ்டாடியோ டா லூஸ் விளையாட்டரங்கில் உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடை பெற்றது. பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியும், அட்லாண்டா அணியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்ற ஆட்டத்தின், 26ஆவது நிமிடத்தில் அட் லாண்டா அணியின் வீரரான மரியோ பசா லிக் அணிக்காக முதல் கோலை அணிக்குப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டத்தின் 90ஆவது நிமிடத்தில் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியின் வீரரான மார்க்கியுனோஸ் அணிக்காக முதல் கோலைப் பெற்றுக்கொடுத்தார். ஆட்டத் தின் 93ஆவது நிமிடத்தில், பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியின் மற்றொரு வீரரான எரிக் மாக்சிம் சவுபோ மோட்டிங் அணிக் காக வெற்றி கோலைப் பெற்றார்.

ஆட்டநேர முடிவில் 2:1 என்ற கோல்கள் கணக்கில் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குள் அடியெ டுத்து வைத்தது. (ரி2)

# பாகிஸ்தான் வெல்லும் இன்சமாம் நம்பிக்கை



லாகூர், ஒக்.15

இங்கிலாந்து கிரிக்கெட் அணியை விடவும் பாகிஸ் தான் கிரிக்கெட் அணி சிறப்பானது என்று நினைக் கின்றேன். இங்கிலாந்துக்கு எதிரான தொடரை பாகிஸ்தான் அணி வெல்லும்.

இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார் பாகிஸ் தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரும், அதிரடித் துடுப்பாட்ட வீரருமான இன்சமாம் உல் ஹக். லண்டன், மான்செஸ்டரில் நடந்த இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தது.

இந்தத் தொடர் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே இன்சமாம் உல் ஹக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இங்கிலாந்து அணியை விட பாகிஸ்தான் அணி சிறப்பானது என்று நான் நினைக்கிறேன். முதலா வது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி ெவெற்றி பெற்றிருக்க வேண்டும்.

நல்ல நிலையில் உள்ள பாகிஸ்தான் அணி தோல்வி கண்டமை ஏமாற்றம் அளித்தது. பாகிஸ்தான் அணியால் தொடரை வெல்ல முடியும் என்று நான் நம்புகிறேன். கடினமான தருணத்தில் அணி யினரின் உத்வேகத்தில் மாற்றம் ஏற்படக்கூடாது. இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் சொதப்பியதால் பாகிஸ்தான் அணியினர் நெருக்க டிக்கு ஆளானார்கள். இதுபோன்ற தோல்வியால் அணி வீரர்களின் உத்வேகம் குறையத்தான் செய் யும். ஆனால் அணி நிர்வாகத்தினர், வீரர்கள் எதிர்மறையான விடயங்களில் கவனம் செலுத்து வதைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். முதல் இன்னிங்ஸில் பெற்ற முன்னி லையை எடுத்துக்கூறி நம்பிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.-என்றார். (ரி2)

# பாலு எழுந்து வா: இளையராஜா உருக்கம்

பாலு எழுந்து வா, உனக்காகக் காத்திருக்கிறேன் என்று பிரபல இசையமைப்பாளர்களில் ஒருவரான இளையராஜா உருக்கமாகப் பேசியுள்ளார்.

ஒகஸ்ட் 5ஆம் திகதி பிரபல பாடகர் எஸ்.பி.பிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். எஸ்.பி.பி உடல்நிலை குறித்த தகவல் வெளியானவுடன் பல்வேறு பிரபலங்கள் அவர் பூரண நலம்பெறப் பிரார்த்தனை செய்வதாக கருத்து பதிவிட்டு வந்தார்கள். தற்போது எஸ்.பி.பியின் நெருங்கிய நண்பரும் பிரபல இசையமைப்பாளருமான இளையராஜா உருக்கமாகப் பேசி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

“பாலு, சீக்கிரமாக எழுந்து வா. உனக்காகக் காத்தி ருக்கிறேன். நம்முடைய வாழ்வு வெறும் சினிமாவோடு முடிந்து போவதில்லை. சினிமாவோடு தொடங்கியது மில்லை. எங்கேயோ ஒரு மேடைக் கச்சேரியில் ஒன்று சேர்ந்து ஆரம்பித்த அந்த இசை நிகழ்ச்சி. அந்த இசை எமது வாழ்வாகவும் நமக்கு முக்கியமான வாழ்வுக்கு ஆதாரமாகவும் அமைந்தது. அந்த மேடை கச்சேரியில் ஆரம்பித்தது நமது நட்பும் இசையும். இசை எப்படி சுவரங்களை விட்டு ஒன்றோடு ஒன்று பிரியாமல் இருக்கிறதோ, அது போன்றது உன்னுடைய நட்பும் என்னுடைய நட்பும். நமது நட்பு எந்தக் காலத்திலும் பிரிந்தது இல்லை. நாம் சண்டை போட்டாலும் சரி. நமது இருவருக்குள்ளும் சண்டை இருந்தாலும் அது நட்பே, சண்டை இல்லாமல் போன போது அது நட்பே என்பதை நீயும் நன்றாக அறிவாய், நானும் நன்றாக அறிவேன். அதனால் இறைவனிடம் நான் பிரார்த்திக் கிறேன். நீ நிச்சயமாகத் திரும்பி வருவாய் என்று என் உள்ளுணர்வு சொல்லுகிறது. அது நிஜமாக நடக்கட்டும் என்று இறைவனை நான் பிரார்த்திக்கிறேன். பாலு சீக்கிரம் வா!” இவ்வாறு இளையராஜா பேசியுள்ளார்.



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 15.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.